

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் : 192 /2016
தேதி : 22.12.2016

## கைது செய்த தூத்துக்குடியை சேர்ந்த தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும்

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனர்-தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை

தூத்துக்குடி மாநகரத்தில் அமைந்துள்ள திரேஸ்புரம் பகுதியில் உள்ள திரு.செல்வராஜ் அவர்களின் வள்ளத்தில் கடலுக்கு மீன் பிடிக்க சென்ற 7 மீனவ சகோதரர்கள் திரு.விக்டர், திரு.அஜித், திரு.வினோத், திரு.பிரவீன், திரு.அமலன், திரு.வெற்றிவேல், திரு.லியோ ஆகியோரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். கிருஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட வேண்டிய சகோதரர்களை கைது செய்து அவர்கள் குடும்பத்தையும் அப்பகுதி மக்களையும் வருத்தத்தில் ஆழ்த்தியுள்ள இலங்கை கடற்படையை வன்மையாக கண்டிக்கிறோம். அது மட்டுமின்றி இது போன்று சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதை தமிழக அரசும் மத்திய அரசும் உடனடியாக நடவடிக்கை எடுத்து தடுத்து நிறுத்த வேண்டும். மேலும் கைது செய்யபட்ட மீனவ சகோதரர்களை உடனடியாக இலங்கை அரசு விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசையும், மத்திய அரசையும் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்